2020 பிப்ரவரி 17]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி): *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதே தடிக்காரன்கோணம் பகுதியில் இன்னொரு முழுநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் 795 முழுநேர நியாய விலை அங்காடிகளும், 1,686 பகுதிநேர அங்காடிகளும் என மொத்தம் 2,481 புதிய அங்காடிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின்மூலம் சாதாரண மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(*மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை*)

தமிழ்நாடு முழுவதும் 35,744 நியாய விலைக் கடைகளின்மூலம் சிறப்பான முறையில் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு கோரிக்கைகள்மீதும், ஆய்வின் அடிப்படையில், தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

கால்நடை மருத்துவமனை

***53300—திரு. பூண்டி கி. கலைவாணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2020 பிப்ரவரி 17

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஆய்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு, இந்த அரசு மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது. இந்த அரசை சிறப்பான முறையில் வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து இந்த அரசை வழிநடத்திச் செல்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடியார் அவர்களுடைய அரசு, மக்களின் நலனுக்காகவே செயல்படுகின்ற அரசு. இந்த அரசு மூன்று ஆண்டுகளில் 300 ஆண்டுகள் சரித்திரம் பேசும் அளவிற்கு அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் பல படைத்து, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கால்நடை பராமரிப்புத் துறையில் சேலம் மாவட்டம், தலைவாசலில் 1,800 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1,020 கோடி செலவில் தெற்காசியாவிலேயே முதன்முறையாக உலகத்தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்கா அமைய அடிக்கல் நாட்டிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஆய்குடி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களான ஊர்க்குடி, மடப்புரம், முகுந்தனூர், கொல்லக்கண்டம், கொத்தவாசலில் சுமார் 703 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை துவக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி, முதலில் கால்நடை கிளை நிலையம்

2020 பிப்ரவரி 17]

தோற்றுவிக்கப்பட்டு, பின்பு அது கால்நடை மருந்தகமாகவும், அதற்குப் பின்னர், கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஆய்குடி ஊராட்சியில் 3,000 கால்நடை அலகுகளுக்கும் குறைவாக உள்ளதால் அங்கு புதிய கால்நடை கிளை நிலையம்கூட அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

ஆரம்ப சுகாதார நிலையம்

***52573—திரு. கே. பழனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், இருங்காட்டுக்கோட்டை–காட்ரம்பாக்கம் இடையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இருங்காட்டுக்கோட்டை-காட்ரம்பாக்கம் இடையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.